பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 12 2025 12 40
வெள்ளிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமரின் தேசிய சிறார் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு 20 பேருக்கு இன்று வழங்கினார்.

2. குரு கோபிந்த் சிங்கின் மகன்கள் முகலாயர்களுடன் வீரமாக போராடி உயிர்த் தியாகம் செய்ததை நாடு நினைவுகூர்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. மத்தியஸ்தர்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தெரிவித்துள்ளார்.

4. சுனாமி நினைவு தினத்தையொட்டி தமிழக கடலோரப் பகுதிகளில் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

5. சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்காக குரு கோபிந்த் சிங்கும், அவரது மகன்களும் ஆற்றிய உயிர்த்தியாகம் என்றென்றும் நினைவுகூரத்தக்கது என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பிரதமரின் தேசிய சிறார் விருதுகளை வழங்கி பேசிய அவர், குரு கோபிந்த் சிங்கின் இளைய மகன்களின் துணிச்சல் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் போற்றப்படுவதாக கூறினார்.

இந்த விருதுகள் நாடுமுழுவதும் உள்ள சிறார்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

விருது பெற்ற சிறார்கள் கலை, கலாச்சாரம், சுற்றுச்சூழல், அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்டதாக திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

நாடுமுழுவதும் இருந்து 20 சிறார்களுக்கு இந்நிகழ்ச்சியில் விருது வழங்கப்பட்டது.

>>><><><><<<

குரு கோபிந்த் சிங்கின் மகன்கள் முகலாயர்களுடன் வீரமாக போராடி உயிர்த் தியாகம் செய்ததை நாடு நினைவுகூர்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வீர சிறார் தினத்தையொட்டி நடைபெற்ற விழாவில், தேசிய சிறார் விருதுகள் பெற்ற 20 பேருடன் அவர் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய பிரதமர், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 26 ஆம் தேதி அவர்களது தியாகத்தை போற்றும் வகையில் வீர சிறார் தினம் கடைபிடிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, வளர்ச்சியடைந்த நாட்டை முன்னெடுத்து செல்வதில் சிறார்களின் பங்களிப்பு முக்கியத்துவம் அளிப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி செல்வதாக அமைச்ர் தெரிவித்தார்.

>>><><><><<<

சீக்கிய குரு கோபிந்த் சிங்கின் மகன்களின் உயிர்த் தியாகத்தை குறிக்கும் வகையில் இன்று வீர சிறார் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், குரு கோபிந்த் சிங்கின் போதனைகளில் மாதா Gujri-ன் விசுவாசத்தையும் நினைவுகூர்வதாக கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், குரு கோபிந்த் சிங்கின் மகன்களின் தியாகத்திற்கு தலைவணங்குவதாக தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், குரு கோபிந்த் சிங்கின் மகன்களுக்கு மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார்.

இந்நாளில் நாட்டுக்காக போராடிய இளைஞர்களின் வீர-தீர செயல்கள் பாராட்டுதலுக்குரியது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

*>>><><><><<<*

*சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி உத்தம் சிங்கின் 126-ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*

*இந்நாளையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தியாகி உத்தம் சிங்கின் வீர-தீர செயல் நாட்டு மக்களுக்கு உத்வேகம் அளிப்பதாக கூறியுள்ளார்.*

*நாட்டின் சுதந்திர போராட்டத்திற்கு தியாகி உத்தம் சிங் தலைமையிலான Ghadar இயக்கம் பெரும் பங்காற்றியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் சுதந்திரத்திற்காக இன்னுயிர் ஈந்த தியாகி உத்தம் சிங்கின் பிறந்தநாளை கொண்டாடுவோம் என்று கூறியுள்ளார்.*

*நீதிக்கான அவரது போராட்டம் இப்போதும் ஊக்கமளிப்பதாகவும், உண்மையான தேசப்பற்றுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.*

*>>><><><><<<*

*வரும் 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் மூலம், ஊரகப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.*

*தூர்தர்ஷனுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர், இந்த இயக்கத்தின்கீழ் வேலைநாட்களின் எண்ணிக்கை 125 நாட்களாக அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.*

*இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய-மாநில அரசுகள் இணைந்து ஆண்டுக்கு 1 லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட இருப்பதாக அவர் தெரிவித்தார்.*

*இதில் 95 ஆயிரம் கோடி ரூபாய் மத்திய அரசின் பங்காக வழங்கப்படும் என்றும் திரு சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.*

*>>><><><><<<*

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு நல்லக்கண்ணுவின் 101 ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை யொட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் இன்று வெளியிட்டுள்ள செய்தியில், விடுதலைப் போராட்ட வீரராகவும், தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அயராது போராடிய போராளியாகவும் திகழ்ந்து பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவராக விளங்குபவர் திரு நல்லக்கண்ணு என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

>>><><><<<

மத்தியஸ்தர்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தெரிவித்துள்ளார்.

கோவாவில், இந்திய பார் கவுன்சில் ஏற்பாடு செய்திருந்த, மத்தியஸ்த விழிப்புணர்வு வாக்கத்தான் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டில் இரண்டரை லட்சம் மத்தியஸ்தர்கள் தேவைப்படுவதாக கூறினார்.

இந்த மத்தியஸ்தர்களுக்கு சட்டம் குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்தியஸ்தம் என்பது கட்டாயமான சட்டம் அல்ல என்றும், மக்கள் தன்னிச்சையாக ஏற்றுக்கொள்வது என்றும் திரு சூரியகாந்த் தெரிவித்தார்.

>>><><><<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்தில் கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு 125 நாள் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு இருப்பதற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த திட்டத்தின்கீழ் வேலை நாட்களை அதிகரித்து இருப்பது தங்களுக்கு பேருதவியாக இருக்கும் என்று தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – பயனாளிகள் – 33 செகண்ட்ஸ்)

>>><><><<<

*சுனாமி தாக்குதலின் 21 ஆம் ஆண்டு நினைவு தினம் தமிழக கடலோரப் பகுதிகளில் இன்று அனுசரிக்கப்படுகிறது.*

*இந்நாளையொட்டி நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி உள்ளிட்ட கடற்கரை கிராமங்களில் மக்கள் சுனாமியில் உயிரிழந்த தங்களது உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – செ.ஜெபராஜ்- 50 செகண்ட்ஸ்)*

>>><><><><<<

*ஆந்திரப்பிரதேசத்தில் இன்று நிகழ்ந்த இருவேறு சாலை விபத்துகளில் 7 பேர் உயிரிழந்தனர்.*

*குண்டூரில் காரும், பேருந்தும் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.*

*Nandyal -லில் கார் ஒன்று பேருந்தில் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.*

*காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

>>><><><><<<

*கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாநகராட்சியின் மேயராக பிஜேபியின் திரு வி வி ராஜேஷ் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*மாநிலத்தில் பிஜேபியைச் சேர்ந்த ஒருவர் மேயராக தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.*

>>><><><><<<

*விளையாட்டுச் செய்திகள்*

*சோலாப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-2, 5-7, 6-1 என்ற செட்கணக்கில் ராஜேஸ்வரன் ரேவதியை வென்றார்.*

*இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் வைஷ்ணவி அட்கரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

----------------------

*தமிழகத்தின் பெரம்பலூரில் பள்ளி மாணவர்களுக்கு இடையேயான 69-ஆவது தேசிய டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.*

*31 மாநிலங்களைச் சேர்ந்த 36 அணிகள் இதில் பங்கேற்றுள்ளன.*

*>>> END OF NEWS <<<*